தலைப்பு 284 வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 284 - வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து வனசீவரசாசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையயை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இல ங்கை பாராளுமன்றத்தின்

பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் ரோகவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான

ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	சுற்றாடல் முறைமையை பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமைததுவம் செய்தல் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டின் இறுதியின் போது திணைக்களத்திற்கு ஒப்படைத்திருந்த ரூபா 2,296,821,546 மொத்த தொகையான நிலையான சொத்துக்களுக்குரிய விடயங்களை சரியாக அடையாளங்கண்டு CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ESCAM செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,296,821,546 ஆக இருந்த போதிலும் அதனை சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்குவதாயின் முறைப்படியாக பொறுப்பேற்றல் இடம்பெறுதல் வேண்டும். ஒப்படைக்கப்பட்ட சொததுக்களை ஒதுக்கீடு செய்து எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	சரியாக கணக்கு வைப்பதனை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

(ஆ)	மின்சார வேலி உபகரணங்களை களவு எடுத்தல் மற்றும் அந்த உபகரணங்களுக்கு சேதம் ஏற்படுத்துதல் தொடர்பான நட்டம் ரூபா 2,358,410 தொகையை 2024 ஆம் ஆண்டில் ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு தீர்மானிக்கக்கப்பட்டு நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தும் அப்பெறுமதி நடைமுறையற்ற சொத்துக்களில் மின்சார உபகரணங்களிலிருந்து நீக்கப்பட்டிருக்காமையால் நடைமுறையற்ற சொத்துக்கள் ரூபா 2,358,410 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் நடைமுறையற்ற சொத்துக்களிலிருந்து நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்ட் சொத்துக்களின் பெறுமதி நீக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி நீக்கப்படாமையின் அடிப்படையில் அந்த மீதி அதிகரித்து காட்டப்படுகின்றது. அதனை 2025 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	சரியாக கணக்கு வைத்தலினை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 50(11) இன் பிரகாரம் வருடாந்த செலவு மதிப்பீடு முடியுமான அளவிற்கு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 04 செலவு விடயங்களின் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,194,901,394 மொத்த தொகை அல்லது 58 சதவீதத்திலிருந்து 73 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன.	பல்நோக்கு உதவியாளர்களை சேர்த்துக்கொள்வதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் நியமனம் வழங்கப்படாமை, வெளிநாட்டு பயண கட்டுப்பாட்டு மற்றும் வெளிநாட்டு பயண செலவுகளை மட்டுப்படுத்துதல், சீருடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக	நடைமுறை விடயங்கள் தொடர்பாக கவனித்துப் பார்த்து நிதிப்பிரமாணம் 50(11) இன் பிரகாரம் மதிப்பீட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		2024 ஆம் ஆண்டு தொடர்பாக பொருட்களை முறைப்படியாக வழங்குதல் இடம்பெறாமை மற்றும் எதிர்பார்த்த செலவுகள் உருவாகியிருக்காமை என்பவற்றால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	

3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்				கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு		**பெறுமதி**	**இணக்கமின்மை**		
		ரூபா			
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(2) ஆம் பிரிவு	-	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தனது நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பான மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கட்டுப்பாட்டு மீளாய்வு தொடர்பான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதாக எனது ME/WFRCD/FIN/ F1 Final.St 2024 ஆம் இலக்க 2025.04.24 ஆந் திகதிய கடிதம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தொடர்பான மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகள்	506,059	மரணமடைந்த சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 506,059 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.	மரணமடைந்த ஊழியர்களின் சேவைக் காலம் 10 ஆண்டுகளுக்கு குறைவானதுடன் மரணப் பணிக்கொடைக்கு தகைமையற்றுள்ளதனால் உரிய கடன் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விதவைக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேலைவயிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரின் மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதி தொடர்பாக சட்ட ஆலோசனைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்தறிகு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சேவையை கைவிட்டுச் சென்ற இன்னுமொரு ஊழியரின் கடன் பணத்தை அறவீடு செய்வதற்காக கடுவல நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவர் வெளிநாடு சென்றுள்ளதனால் தற்போதைய விலாசத்தினைப்	தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும்.

				பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சேவையை கைவிட்டுச் சென்ற இன்னுமொரு ஊழியரின் கடன் தொகையை அறவீடு செய்வதற்காக சொத்துக்களின் உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்ளும் போது அவரிடம் சொத்துக்கள் இல்லை என உரிய பிரதேச செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571(2)	1,579,802	வைப்புச் செய்த திகதியிலிருந்து 02 ஆண்டுகளை மிகைத்த அனைத்து வைப்புக்களும் காலங்கடந்த வைப்புக்களாகக் கருதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,543,326 தொகையான மற்றும் 04 ஆண்டுகளை மிகைத்த ரூபா 36,476 தொகையான வைப்புக்கள் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 1,543,326.95 தொகையினை வைப்புச் செய்த நிறுவனத்திடம் வேண்டுதல் சமர்ப்பிக்கப்படவில்லையாயினும் அரசாங்க வருமானத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ரூபா 36,476.11 தொகையினை அரசாங்க வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஈ)	2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை யின் 2(iv) ஆம் பிரிவு	45,885,481	அனுராதபுரம் கிழக்கு, வவுனியா, திருகோணமலை மற்றும் மத்திய வலய அலுவலகங்களில் வருகை மற்றும் வெளிச்செல்லலானது விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படாது மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறைதினப் படிகள் முறையே ரூபா 13,506,093, ரூபா 11,971,448, ரூபா 1,845,650, ரூபா 2,940,,239 மற்றும் ரூபா 15,622,051 ஆக மொத்தமாக ரூபா 45,885,481 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தபட்டிருந்தது.	விரல் அடையாளமிடும் இயந்திரம் இல்லாது அலுவலகத்தின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டின் நேரங்களை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ள்ளது.	2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் ரோகவையி ன் 06 ஆம் பந்தி	-	நட்டத்தின் பெறுமதி குறிப்பிடப்படாத 09 வாகன விபத்துக்கள் நட்டங்கள் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் பட்டிருந்தும் அவை நிதிக்கூற்றுக்களில் (பின்னிணைப்பு 01) நட்டங்கள் மற்றும் கைவிடுதல்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை ல.	வாகன விபத்து அறிவிக்கப்பட்டுள்ள தனால் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள் ளது. உரிய அறிக்கைகளின் மூலம் நட்டம் சம்பந்தமான தகவல்களைப் பெற்ற பின்னர் நிதிப் பெறுமதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	வழிகாட்டிக் கோவைக்கு இணங்கியிருத்த ல் வேண்டும்.

3.3 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கணக்காய்வுத் திகதியான 2024 திசெம்பர் 23 ஆந் திகதியில் உள்ளவாறு வில்பத்து தேசிய பூங்காவின் மோட்டார் கிரேடர் இயந்திரத்தின் மைலோ மீற்றருக்கு இணங்க இயந்திர மணித்தியாலம் 1,494 ஆக இருந்த போதிலும் நாளாந்த ஓட்ட அட்டவணையில் இயந்திர மணித்தியாலயத்தினை 2010 வரை காட்டி 516 மணித்தியாலங்களை மாற்றம் செய்து 5160 லீற்றர் எரிபொருக்காக ரூபா 1,475,760 பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.	மைலோமீற்றரில் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வித்தியாசம் காணப்பட்டிருந்தது எனவும் அது சம்பந்தமாக மற்றும் எரிபொருளினைப் பயன்படுத்துவது சம்பந்தமாக எதிர்காலத்தில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அனுராதபுரம் வலயத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் மேற்கூறிய இயந்திரம் 2024 செப்தெம்பர் 08 மற்றும் 13 ஆகிய திகதிகளின் போது ஒரு நாளுக்கு 50 இயந்திர மணித்தியாலம் வீதம் 100 மணித்தியாலம் ஓடியுள்ளது எனவும் அதற்காக 1000 லீற்றர் எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த து எனவும் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க ஒரு நாளைக்கு வேலை செய்த இயந்திர மணித்தியாலங்களின் எண்ணிக்கையை சராசரி மணித்தியாலயத்திற்கு பரிமாற்றம் செய்கையில் ஒரு நாளைக்கு 37.5 மணித்தியாலமாக	மைலோ மீற்றரில் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வித்தியாசம் காணப்பட்டது எனவும் அது சம்பந்தமாகவும் எரிபொருள் பயன்பாடு சம்பந்தமாகவும் எதிர்காலத்தில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அனுராதபுர வலயத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளரினால் தெரியப்படுத்தப்பட்டது.	முறையான உள்ளகக் கட்டுப்பாட:டு முறைமையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நியாயமற்ற பெறுமதியைக் கொண்டிருந்ததனால் ஓட்ட அட்டவணையை பிழையாக எழுதியதன் மூலம் எரிபொருள அல்லது இயந்திரத்தினை முறைகேடாகப் பயன்படுத்துதல் இடம்பெற்றிருந்தது.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 54.05 மில்லியன் தொகையான 63 செயற்பாடுகள் சம்பந்தமாக எந்த பௌதீக செயல்முன்னேற்றமும் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டிற்கான திரண்ட நிதியத்தின் நிதிசார் செயல்முன்னேற்றம் ரூபா 253.9 மில்லியனாகும். அது சதவீதமாக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டுத் தொகையான ரூபா 292 மில்லியனில் 86.9% ஆகும். எனவே நிதிசார் செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படாதிருந்தமை ரூபா 38.1 மில்லியன் மாத்திரமாகும். திட்டமிடப்பட்ட சில செயற்பாடுகளானது களத்தில் காணப்பட்ட பிரச்சினையான நிலைமையின் காரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதிலாக வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	திட்டமிட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ஆண்டிற்குள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 23.71 மில்லியன் தொகையான 62 செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 3% இற்குபம் 30% இற்கும் இடைப்பட்ட ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டில் திரண்ட நிதியத்தின் நிதிசார் செயல்முன்னேற்றம் ரூபா 253.9 மில்லியனாகும். அது சதவீதமாக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டுத் தொகையான ரூபா 292 மில்லியனில் 86.9% ஆகும். எனவே நிதிசார் செயல்முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டிருக்காமை ரூபா 38.1 மில்லியன் மாத்திரமாகும். சில திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் களத்தில் காணப்பட்ட பிரச்சினையான நிலைமையின் காரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதிலாக ஏனைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.	திட்டமிடப்பட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	மின்னேரியா சரணாலயமும் அதன் சுற்றுப்புற முறைமையும் மற்றும் உயிரினங்கள் தொடர்பாக சுற்றுலா பயணிகளுக்கு புரிந்துணர்வை வழங்கும் நோக்கத்தில் நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள நூதன சாலையானது முறையாக பராமரிக்கப்படாமை மற்றும் திருத்தம் செய்யப்படாமையின் காரணமாக	சுற்றுலா தகவல் நிலையத்தின் கூரை உடைந்த நிலையில் இருப்பதன் காரணமாக மழை காலங்களில் உபகரணங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் கூரையை திருத்தம் செய்தல் 2025 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	திருத்தங்களை மேற்கொண்டு சுற்றுலா கவர்ச்சியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	அசுத்தமடைந்து இருப்பதனால் அந்த நூதனசாலையானது காட்சிப்படுத்துவதற்கு பொருத்தமான மட்டத்தில் இருக்கவில்லை.		
(ஆ)	கவுடுல்ல சரணாலயத்தில் அமைந்துள்ள மெனிக்சொரொச்ச சுற்றுலா விடுதியினை திருத்தம் செய்யும் நடவடிக்கை ரூபா 3,555,313 செலவில் 2024 ஏப்ரல் மாதத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் 2025 ஏப்ரல் 04 ஆந் திகதி வரை சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டிருக்கவில்லை.	நீண்டகாலமாக சுற்றுலா விடுதி மூடப்பட்டிருந்ததன் காரணமாக அப்போதிருந்த பங்களா பொறுப்பாளர் ஏனைய சுற்றுலா விடுதிக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் வருடாந்த இடமாற்றத்தின் மூலம் பங்களா பொறுப்பாளர் ஒருவர் கிடைத்ததன் பின்னர் சுற்றுலா விடுதியினை திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	திணைக்களத்தின் ஆளணியினருக்கு பயிற்சிப் தொடரினை நடாத்துவதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட ரிடிகல பயிற்சி நிலையத்தில் 2024 ஆம் ஆண்டின் போது 05 பயிற்சி தொடர்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.	வளவாளர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கும் போதும் இணையதள வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போதும் உருவாகிய பிரச்சினையின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த சில பயிற்சி நிகழச்சித்திட்டங்களை வேறு இடங்களில் நடாத்த வேண்டி ஏற்பட்டிருந்துடன் 2025 ஆம் ஆண்டின் போது சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	சொத்துக்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
ஹோரிட்டன் தென்ன தேசிய பூங்கா தொடர்பாக 2005 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட முகாமைத்துவ திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட தேசிய பூங்காவின் தலைமை அலுவலகம் மற்றும் நுழைவுச் சீட்டு கவுன்டரினை பட்டிபொல வரை தாழ்வான இடத்திற்கு கொண்டு வருதல், வருகை தருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் தரமான சுற்றுலா வசதிகளை வழங்குவதற்காக ஓய்வெடுக்கும் இடங்களை உருவாக்குதல், உள்நாட்டைப் போல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உணவுச்சாலையை உருவாக்குதல், சுற்றுலா பயணிகள் பயணம் செய்கின்ற வீதிகளில் பொருத்தமான இடங்களில் ஓய்வு எடுப்பதற்கு தேவையான வசதிகளை ஸ்தாபித்தல் ஆகிய செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	• பட்டிபொல நுழைவு அனுமதிப்பத்திர கவுன்டர்களை பட்டிப்பொல நகரத்திற்கு அருகாமையில் உள்ள ஒரு இடத்திற்கு எடுத்துச்செல்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கிறேன். • ஹோட்டன்தென்ன தேசிய பூங்காவில் உணவுச் சாலைக்கு அருகாமையில் உள்ள சுகாதார வசதிகளைத் தவிர்த்து வசதிகளும் அனைத்து பொது சுகாதார வசதிகளும் முகாமைத்துவ திட்டத்தில் காட்டப்பட்டுள்ள பரிந்துரைக்கு இணங்க ஸ்தாபிக்கப்பட்டன. • சுற்றுலா பயணிகள் பயணம் செய்கின்ற இயற்கையான பாதைகளில் சுகாதார வசதிகள் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் அவர்களுக்கு இருக்கைகள் அமைத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படவில்லை.	உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2006 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் பந்திகளின் பிரகாரம் அனைத்து தொடர்புபட்ட கிரத்தையும் உள்ளடக்கி முழுக் கிரய மதிப்பீடு பெறுகை செய்யும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்கான சீருடை துணைக் கருவிகளைக் கொள்வனவு செய்யும் செயற்பாட்டிற்காக ஒரு கிரய மதிப்பீடு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	சீருடைத் துணைக் கருவிகளை கொள்வனவு செய்வதற்காக கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் பெறுகைத்திட்டத்திலும் மதிப்பீட்டுப் பெறுமதியாக உள்ளடக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு .இணங்கியிருத்தல் வேணடும்.

4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சுற்றாடல் முறைமையை பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல செயற்திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட ரூபா 2,296,821,546 மொத்த தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பான விடயங்களை சரியாக அடையாளங்கண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	ESCAM செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களை நிலையான சொத்துக்களாக உள்ளடக்குவதாயின் முறைப்படியாக நிர்ணயிக்கப்பட்ட ஆவணங்களை ஒப்படைத்தல் மற்றும் பொறுப்பேற்றல் இடம்பெறுதல் வேண்டும். அதற்கிணங்க எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என தயவாக தெரிவிக்கிறென்.	உரிய சொத்துக்களை சரியாக அடையாளங்கண்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.7 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) தீணைக்களத்தின் குறிக்கோள்களுக்கு மத்தியில் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் சுற்றாடல் முறைமைகளை பேணிப் பாதுகாக்கின்ற அதேவேளை சுற்றாடல் சுற்றுலா நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்களை பயன்படுத்தும் வசதிகளை உருவாக்க வேண்டியமை உள்ளடக்கப்பட்டிருந்தும் திணைக்களத்தின் தேசிய பூங்காக்களில் காணப்பட்ட பின்வரும் குறைபாடுகளின் காரணமாக அக்குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.		
(i) **ஹோர்ட்டன்தென்ன தேசிய பூங்கா**		
பூங்காவில் காணப்படுகின்ற ''வனஇல்லம்'' சுற்றுலா விடுதி மிகவும் உடைந்ததான மற்றும் அசுத்தமான நிலையில் காணப்படுவதுடன் சுகாதார வசதிகளும் இல்லாமையின் காரணமாக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சுற்றுலா விடுதிகளை ஒதுக்கீடு செய்தல் ஒரு மாதத்திற்கு 01 நாளிலிருந்து 12 நாட்கள் வரையான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அவ்வாறே பூங்காவில் அமைந்துள்ள ஊழியர் உத்தியோகபூர்வ இல்லங்கள் பல	பூங்கா தலைமையகத்திற்கு அருகாமையில் 13 மலசல கூடங்கள் உள்ளதுடன் சுத்திகரிப்பு செய்யும் சேவைகள் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இடர்பாடுகளின் காரணமாக சேதமடைந்துள்ள மலசலகூட வசதிகளை துரிதமாக திருத்தம் செய்வதனையும் முன்னுரிமை செயற்பாடாக கருதி நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுலா விடுதியில் பிரதான திருத்த வேலைகளை மேற்கொள்ளும் எதிர்பார்ப்பில் தற்பொழுது பெறுகை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தம்	சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஆண்டுகளாக திருத்தம் செய்யப்படாமையின் காரணமாக வனசீவராசிகள் உத்தியோகத்தர்களுக்கு தமது கடமைகளை திருப்தியாக மேற்கொள்வது சிக்கலாக இருந்தது.	வழங்கப்பட்டுள்ளது.	
(ii)	**ஹொரகொல்ல தேசிய பூங்கா**		
	வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் 1992 அவசர தொலைபேசி அழைப்பு இலக்கத்திற்கு கிடைக்கின்ற மிருக விபத்துக்கள் சம்பந்தமான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மிருகங்களை விடுவித்தல் மற்றும் மிருகங்களுக்கு சிகிச்சையளித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் ஹொரகொல்ல தேசிய பூங்கா அதிகாரப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேசங்களில் காணப்படுகின்ற புலி மனித மோதல்களின் காரணமாக விபத்துக்குள்ளாகின்ற புலிகளை விடுவித்தல் மற்றும் சிகிச்சையளிப்பதற்கு தேவையான உபகரணங்கள் அலுவலகத்தில் இருக்கவில்லை.	ஹொரகொல்ல தேசிய பூங்கா பொறுப்பாளரின் வேண்டுதல்களுக்கு இணங்க புலி மனித மோதல்களை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன்.	விபத்துக்கு உள்ளாகின்ற விலங்குகளை விடுவிப்பதற்கும் சிகிச்சையளிப்பதற்கும் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	**மின்னேரியா மற்றும் கவுடுல்ல தேசிய பூங்கா** -----------------------------------		
	மின்னேரியா வன பூங்கா ஆரம்பிக்கப்பட்டு 27 ஆண்டுகள் அளவில் கடந்திருந்தும் சுற்றுலா	மின்னேரிய தேசிய பூங்காவிற்கு குழாய்க் கிணற்றின் மூலம் நீரினைப் பெற்று	சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளை

	பயணிகளின் அடிப்படைத் தேவைப்பாடான சுத்தமான குடிநீரினை வழங்குவதற்கு திணைக்களம் தவறியிருந்ததுடன் சுகாதார வசதிகளும் தரமான நிலையில் காணப்படவில்லை.	பயன்படுத்தப்படுகின்றது. தொழில்நுட்ப ரீதியாக சுத்திகரிக்கப்படுகின்ற 1000 லீற்றர் கொள்ளளவு போதியதல்லாததன் காரணமாக அதிக கொள்ளளவு உள்ள RO தொழில்நுட்பத்தைக் கொண்ட நீரினை சுத்திகரிக்கின்ற ஒரு இயந்திரத்தினை 2025 ஆம் ஆண்டில் பொருத்துவதனை திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	**பரவி தீவு தேசிய பூங்கா** -----------------------------------		
	பரவி தீவு தேசிய பூங்காவிற்குள் உட்செல்வதற்காக காணப்படுகின்ற "A" கவுண்டர் கடல் அரிப்பின் மூலம் சேதமடைந்திருந்ததுடன் தற்காலிக கொள்கலன் பெட்டியின் ஒரு பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட "B" கவுண்டரும் முறைப்படியாக பராமரிக்கப்படாமையின் காரணமாக துருப்பிடித்து அழிவடைந்து காணப்படுகின்றது. நுழைவுச்சீட்டு கவுண்டரின் கூரையும் உடைந்து ஆபத்தான நிலையில் காணப்பட்டதுடன் எந்த சுகாதார வசதிகளும் இருக்கவில்லை. அவ்வாறே பூங்காவை பார்வையிடுவதற்கு வருகின்ற சுற்றுலா பயணிகளிடமிருந்து நுழைவுப் பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருந்தும்	இந்த இரண்டு நுழைவுச் சீட்டு கவுணண்டர்களும் அமைந்துள்ள காணி கரையோர பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமானது என்பதனால் திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான வகையில் அபிவிருத்தி செய்வதற்கான இயலுமை இல்லை. பழைய நுழைவுச்சீட்டு கவுண்டர் அமைந்துள்ள காணி கடல் அரிப்பிற்கு உள்ளாகுவதன் காரணமாக புதிய நுழைவுச் சீட்டு கவுண்டரினை நிர்மாணிப்பதற்காக அதற்கு அருகாயைமில் உள்ள குச்சவெளி பிரதேச சபைக்குச் சொந்தமான 04 பேச்சர்ஸ் காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டு புதிய திட்டத்திற்கு இணங்க நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. "பீ" நுழைவுச் சீட்டு கவுண்டரினை புனரமைப்புச் செய்வதற்காக மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கும் புதிய	சுற்றுலா பயணிகளுக்குத் தேவையான ஆகக் குறைந்த வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	எந்த சுற்றுலா வசதிகளும் வழங்கப்படவில்லை.	நுழைவுச் சீட்டு கவுண்டரினை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.	
(ஆ)	மொரகஹகந்த நீர்த்தேக்க செயற்திட்டத்தின் காரணமாக மின்னேரியா மற்றும் கவுடுல்ல நீர்த்தேக்கங்களில் தொடர்ச்சியாக நீர் நிரம்பியிருப்பதன் காரணமாக குளத்து மைதானங்களில் புல்லை உணவாகப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தரும் யானைக் கூட்டங்களுக்கு உணவு போதியதாக இல்லாததனால் காட:டு யானைகள் கிராமத்திற்க் ஊடுருவி யானை மனித மோதல் உக்கிரமடைவதை தவிர்த்தல் மற்றும் சுற்றுலா கைத்தொழிலினை பாதுகாப்பதற்காக மின்னேரிய மற்றும் கவுடுல்ல நீர்த்தேக்கங்களின் நீரினை முகாமைத்துவம் செய்தல், சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு திணைக்களம் தீர்மானித்திருந்தும் 2024 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் அவவாறான புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	மொரகஹகந்த நீர்த்தேக்க செயற்த்திட்ட நீர் முகாமைத்துவத்தில் இடம்பெற்றுள்ள மாற்றங்களின் காரணமாக மின்னேரியா மற்றும் கவுடுல்ல நீர்த்தேக்கங்கள் ஆண்டு முழுவதும் நீர் நிரம்பியிருத்தல் புல் வளர்வதற்கு தடையாக உள்ளது. அதன் காரணமாக காட்டு யானைகள் ஒன்று சேர்வது குறைவடைந்ததுடன் இந்நிலைமையை தவிர்ப்பதற்காக பொறுப்புக்கூற வேண்டிய ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தினை காட்டு யானைகளுக்கு சிறப்பானதாக பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினைக்கு நீண்டகால மற்றும் நிரந்தர தீர்வாக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், இலங்கை மஹவெலி அதிகாரசபை, நீர்ப்பாசன திணைக்களம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் தரப்பினர்களாக செயற்பட்டு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. எதிர்ப்புக்களின் காரணமாக மேற்கூறிய புரிந்துணர்வு உடன்படிக்கை இன்றுவரை மேற்கொள்ளப்படாதிருந்தும் 2023 ஆம் ஆண்டிலிருந்து மின்னேரியா மற்றும் கவுடுல்ல நீர்த்தேக்கங்களின்	உரிய தரப்பினர்களுடன் சட்டரீதியான தன்மையை உருவாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நீர் மட்டத்தினை கட்டுப்படுத்தி காட்டு யானைகளுக்குத் தேவையான புல் நில்ங்களைப் பேணுவதானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.	

5. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளையும் இலக்குகளையும் அடையாளங்கண்டு அவற்றினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்ற ஒரு நிறுவனமாக அதன் இலக்குகள் 10 மற்றும் 11 இற்கு இணங்க எல்லோருக்கும் சமத்துவத்தை உருவாக்குவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் ஊனமுற்ற நபர்கள் உட்செல்லக்கூடிய வகையில் பூங்காவிற்குள்ளும் அதற்கு வெளியேயும் வசதிகள் வழங்கப்படவில்லை	வனசீரவாசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அலுவலக வளவில் ஊனமுற்ற நபர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் வனசீவராசிகள் தேசிய பூங்காக்களுக்கு வசதிகளை வழங்கும் போது இயற்கை சுற்றாடலினை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதனால் உருவாகும் பிரச்சினையான நிலைமையை தவிர்த்துக் கொண்டு ஊனமுற்ற நபர்களுக்கு தேவையான உச்ச அளவு வசதிகளை வழங்குவதறகுத் தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடையாங்கண்டு அவற்றை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்திலுள்ள 41 வெற்றிடங்களை உள்ளடக்கி திணைக்களத்தின் ஒட்டுமொத்த ஆளணியினரின் வெற்றிடங்கள் 1377 ஆகும். வருமானத்தை தோற்றுவிக்கின்ற ஒரு திணைக்களமாக மற்றும் நாடுமுழுவதும் வியாபித்து	மேலதிக பணிப்பாளர் நாயக பதவிக்காக ஆட்சேரப்பு நடைமுறையினை அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக அத்தியவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காணப்படுகின்ற அலுவலக வலையமைப்பைக் கொண்டுள்ள இத்திணைக்களத்தின் நடவடிக்கைகளை மிகவும் ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்காகவும் முகாமைத்துவ தீர்மானங்களை எடுப்பதற்காகவும் சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்ட பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது..

உதவிப் பணிப்பாளர் பதவி மற்றும் பொறியியலாளர் பதவிக்காக அரசாங்க நிருவாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு வேண்டுதல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 16 கால்நடை மருத்துவ பதவிகளுக்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வெற்றிடங்கள் சம்பந்தமாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 07 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கான பதவியுயர்த்துதல் நடைமுறை அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.